DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No. 86/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | சந்திரன் | Age | : | 48 |
| F/N | : | ஆறுமுகம் | Occupation | : | பேன்ஸி பொருட்கள் வியாபாரம் |
| Village | : | உச்சிப்புளி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 09th day of December 2024.

**09.12.2024**

**(எதிரி ஆஜராகவில்லை). (சாட்சி குவிமுச பிரிவு 311ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** இந்த வழக்கு சம்மந்தமாக என்னை கடந்த 31.08.2019ம் தேதி காவல்நிலையத்தில் வைத்து போலீசார் விசாரித்தார்கள். நேரம் சரியாக ஞாபகம் இல்லை. ஆனால் இரவு நேரத்தில் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரியை காவல்நிலையத்தில் பார்ப்பதற்கு முன்பு வேறு எங்கேயும் வைத்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. காவல்நிலையத்தில் எதிரி தான் விபத்து ஏற்படுத்தினார் என்று யாரோ ஒரு நபர் கூறினார். விபத்து நடக்கும் போது நான் மண்டபம் கேம்பில் இருந்தேன். எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியும். புகார்மனுவை எனது தம்பி எழுதினார். நான் கையொப்பம் செய்தேன். புகார்மனுவை சார்பு ஆய்வாளர் சொல்ல, சொல்ல என் தம்பி எழுதினார். விபத்தில் இறந்தவர் எனது இரண்டாவது மனைவி ஆவார். நான் முதல் மனைவியை சட்டப்படி விவகாரத்து செய்யவில்லை என்றால் சரிதான்.

**2.** நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு அன்றைய தினம் பேருந்தில் இரவு 08.00 மணிக்கு சென்றேன். மண்டபத்தில் இருந்து இராமநாதபுரத்திற்கு ஒரு மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். மண்டபத்தில் இருந்து இராமநாதபுரத்திற்கு வருவதற்கு 1 ½ மணி நேரம் ஆகும் என்றால் சரியல்ல. விபத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். புகார்மனுவில் வேறொரு மையால் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மகனுக்கு ஒட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட TVS XL

வாகனம் எனது மனைவியின் பெயரில் உள்ளது. விபத்தானது இரவு நேரத்தில் நடைபெற்றது என்றால் சரிதான். வேறொரு வாகனத்தால் விபத்து ஏற்பட்டு எனது மனைவி மற்றும் மகன் இறந்துவிட்டார்கள் என்றாலும், நஷ்ட ஈடு பெறுவதற்காக எதிரி மீது இந்த வழக்கை பொய்யாக தொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

PRABHAKARAN G

Digitally signed by PRABHAKARAN G
Date: 2024.12.09 13:05:58 +0530

**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**